இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25 தனிப்பிரதி ரூ.3

மலர் 17 ஜூலை –2026 மணம் 4



# சொன்னதைச் செய்கிறவர்...

ஆசிரியர் : சகோ. ஜான் M. ஜெயராஜ்

# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

நான் கர்த்தர், நான் சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும் என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். அவர் நமது உள்ளத்தை அறிகிற தேவனாக இருப்பதினால், நமது மனதின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொடுப்பார். நாம் மனிதரிடத்தில் பேசுவதைக் குறைத்து, கர்த்தரிடம் பேசுவோம். காரியங்கள் ஜெயமாக முடியும்.

தேசத்தில் நடக்கிற சம்பவங்கள், கர்த்தரின் வருகை சமீபம் என்பதையும், வசனங்களின் நிறைவேறுதலையும் நமக்கு உணர்த்துகிறது. இனி காலம் செல்லாது. எல்லாவற்றிற்கும் மூடிவு சமீபமாயிற்று. விழிப்புடன் செயல்பட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நமது மிஷனெரி பணித்தளங்களுக்காக ஜெபியுங்கள். புதிய ஆத்துமாக்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. விசவாசப் பிள்ளைகளும் கர்த்தரிலும், வசனத்திலும் வளர்ந்து பெருக வேண்டும். தங்களுக்கு கிடைக்கப்பட்ட நாட்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்வார்களாக!

இந்த மாதத்தில் பெதஸ்தா நகர், மணிமுத்தான்குளம் பணித்தளங்களில் நடக்கயிருக்கும் கன்வன்ஷனுக்காக ஜெபியுங்கள். மக்கள் உற்சாகமாகப் பங்கு கொள்ளவும்;, கர்த்தருக்காகப் பிரகாசிக்கவும் ஜெபியுங்கள். உங்கள் ஜெப விண்ணப்பங்களையும் ஜெபிக்க எழுதுங்கள். நாம் இணைந்து ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வாராக!

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் M. ஜெயராஜ்**

## இயேசு ஜீவிக்கிறார் பணித்தள நற்செய்திக் கூட்டங்கள் - 2026

இடம்: **மணிமுத்தான்குளம்**

நாள்: **ஜூலை 18,19** (சனி, ஞாயிறு)

நேரம்: **தினமும் மாலை 6:30 மணி**

**ஞாயிறு காலை 10:00 மணி ஆராதனை**

நற்செய்தியாளர்:

**சகோ.P. ஜேக்கப் சங்கர்,**
VMM, விருதுநகர்.

**ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!**

இடம்: **பெதஸ்தா நகர்**

நாள்: **ஜூலை 25,26** (சனி, ஞாயிறு)

நேரம்: **தினமும் மாலை 6:30 மணி**

**ஞாயிறு காலை 10:00 மணி ஆராதனை**

நற்செய்தியாளர்:

**Evgt. Dr.I.ரபி ராஜசிங், வேலூர்.**

தொடர்புக்கு: சகோ. ஜான் M. ஜெயராஜ்
செல்: 94431 13292

**மன்னா:**

# கர்த்தர் சொன்னதைச் செய்கிறவர்

**நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.**

**(ஆதி. 28:15)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

கர்த்தர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ? என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் ஆண்டவர் தமது மன்னாவினால் நம்மைப் போஷிக்கின்றார். அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக் கொண்டேன்.

கடந்த மாதத்தில், "நீ ஜெயிக்கிறாயா? ஜெயிக்கப்படுகிறாயா?" எனும் தலைப்பின் கீழாகக் கர்த்தர் நம்மோடு பேசினார். நம்மை அழைத்தவர் ஜெயிக்கிறவராக இருப்பதினால், நாமும் நமது வாழ்வில் சந்திக்கும் காரியங்களைச் ஜெயிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் ஜெயிக்கவில்லையென்றால், அந்தக் காரியங்கள் நம்மை ஜெயித்துவிடும் அப்படியானால் நாம் தோற்றுப்போவோம் என்பதே உண்மை.

இந்த மாதத்திலும் "கர்த்தர் சொன்னதைச் செய்கிறவர்" எனும் தலைப்பின் கீழாக நம்மோடு பேசும்படி கர்த்தர் வந்திருக்கிறார். யாக்கோபின் வாழ்க்கையில் அவனுடைய சகோதரனாகிய ஏசாவுக்குப் பயந்து, ஆரானிலிருக்கிற தன் தாய் ரெபெக்காளின் சகோதரனாகிய, தனது மாமா லாபானிடத்துக்குப் புறப்பட்டுப்போனான்.

யாக்கோபு போகிற வழியில் சூரியன் அஸ்தமித்த படியினால், அங்கு ராத்தங்கி நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான். அங்கே அவன் ஒரு சொப்பனம் கண்டான். இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதின் நுனி வானத்தை எட்டியிருக்கிறது. அதிலே தேவ தூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தர் அதற்கு மேலாக நின்று யாக்கோபோடே பேசினார்.

**நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னை திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.**

அதிகாலையில் யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி, அந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பெயரிட்டான். அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் எனும் பெயர் இருந்தது. நான் போகிற இடத்திலெல்லாம் என்னைக் காப்பாற்றி, என்னை என் தகப்பன் வீட்டுக்குத் திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார். நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசம பாகம் செலுத்துவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணிக்கொண்டான்.

வருடங்கள் கடந்து போயின. கர்த்தர் யாக்கோபை நோக்கி: லாபான் உனக்குச் செய்கிற யாவையும் கண்டேன். பெத்தேலிலே உனக்குத் தரிசனமாக தேவன் நானே! நீ எழுந்து இந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிடத்திற்கு திரும்பி போ என்று

சொன்னார். யாக்கோபு தன் பொருட்கள், மந்தைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தன் தகபபனாகிய ஈசாக்கினிடத்துக்குப் போகப் புறப்பட்டான். வழியிலெல்லாம் தேவன் அவனுக்கு பாதுகாப்பாயிருந்தார். இவ்விதமாய் யாக்கோபு மம்ரேக்கு தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்திற்கு வந்தான்.

அன்பு நேசப்பிள்ளைகளே, வாக்குக் கொடுத்தவர் வாக்கு மாறாதவர். உங்கள் வாழ்க்கையிலும் உங்களுக்குச் சொன்னதை நிறைவேற்றியே முடிப்பார். ஜெபத்துடன் தொடருங்கள். கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக!

## 1. யோசேப்பின் வாழ்க்கையிலே

**யோசேப்பு சகோதரரை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்; நாம் வயிலிலே அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்போழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான்... (ஆதி. 37:6,7)**

**யோசேப்பு எகிப்துக்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் விற்றான். யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள். (ஆதி. 42:6)**

யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். இஸ்ரவேலின் முதிர் வயதிலே யோசேப்பு பிறந்ததினால், இஸ்ரவேல் தன் மூத்த குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்கு பலவருண அங்கியைச் செய்வித்தான். அவன் சகோதரர் அதைக் கண்டு அவனைப் பகைத்தார்கள். இந்த சூழ்நிலையில் தான் அவன் சொப்பனம் கண்டு, அதைச் சகோதரருக்கு அறிவித்தான். அவனது தகப்பனும் சகோதரர்களும் அவனைக் கடிந்து கொண்டார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்க சீகேமுக்கு போனார்கள். தகப்பன் யோசேப்பைக் கூப்பிட்டு, சீகேமுக்குப் போயிருக்கிற சகோதரர்களைப் பார்த்து, சுக செய்தி விசாரித்து வா என்று அனுப்பினான். அப்படியே அவனும் சென்று அவர்களைச் சந்தித்தான்.

அவர்கள் அவனைத் தூரத்திலே வரக்கண்டு, அவனைக் கொலை செய்யும்படி சதியோசனை பண்ணி, இதோ சொப்பனக்காரன் வருகிறான் நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே போட்டு, ஒரு துஷ்ட மிருகம் அவனை பட்சித்தது என்று சொல்லுவோம். அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்.

ரூபன் யோசேப்பைத் தப்புவிக்கும்படி, குழிகளில் ஒன்றிலே போட்டான். யூதா தன் சகோதரரை நோக்கி நாம் இவனைக் கொன்று போடுவதினால் நமக்கு லாபம் என்ன? அவனை இஸ்மவேலருக்கு விற்றுப் போடுவோம் என்று சொல்லி, இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்துக்குக் கொண்டு போனார்கள்.

எகிப்திலே பார்வோனுடைய பிரதானியாகிய போத்திபார் யோசேப்பை வியாபாரி களிடத்திலே விலைக்கு வாங்கினான். கர்த்தர் யோசேப்போடே கூட இருந்தார். போத்தி பாரின் மனைவி மூலமாக ஏற்பட்ட பிரச்சனையினால் அவன் யோசேப்பை சிறைச் சாலையில் போடுவித்தான். சிறைச்சாலையிலும் கர்த்தர் யோசேப்போடே கூட இருந்தார்.

சிறைச்சாலையில் யோசேப்போடே இருந்த சுயம்பாகியும் பானபாத்திரக்காரனும் தாங்கள் கண்ட சொப்பனத்தினிமித்தம் துக்கமாக இருந்தார்கள். இதைக் கவனித்த யோசேப்பு அவர்கள் சொப்பனத்தை அறிந்து அவைகளுக்கு சொன்ன அர்த்தத்தின்படியே நடந்தது. யோசேப்பு சொன்னபடியே பானபாத்திரக்காரன் மீண்டும் உயர்த்தப்பட்டான். நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும் என்று யோசேப்பு, பானபாத்திரகாரனிடத்தில் சொன்னான். ஆனாலும் பானபாத்திரக்காரன் யோசேப்பை மறந்து விட்டான்.

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் பார்வோன் இரண்டு சொப்பனங்கண்டான். அதின் அர்த்தத்தைச் சொல்ல ஒருவராலும் கூட வில்லை. அப்பொழுது பானபாத்திரக்காரன் யோசப்பை நினைத்து, பார்வோனிடத்திலே பேசினான். பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான். யோசேப்பு வந்து அர்த்தத்தைச் சொன்னான். அதினிமித்தம் பார்வோன் யோசேப்பை அதிபதியாக உயர்த்தினான்.

செழிப்பான ஏழு வருடங்கள் முடிந்தபின்பு, பஞ்சமான வருடங்கள் ஆரம்பித்தது. கானானிலும் பஞ்சம் அதிகரித்தது. எகிப்திலே தானியம் உண்டென்பதை தகப்பானாகிய இஸ்ரவேல் அறிந்து, தன் குமாரரை எகிப்துக்கு அனுப்பினான். அவர்கள் எகிப்துக்கு வந்து, யோசேப்புக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து அவனை வணங்கினார்கள். யோசேப்பு அவர்களைத் தன் சகோதரர் என்று அறிந்தும், அவர்கள் யோசேப்பை அறியவில்லை. கிட்டதட்ட இருபத்திரண்டு (22) வருடங்களுக்குப் பிறகு சகோதரர்கள் சந்திக்கிறார்கள்.

அன்பு நேசப்பிள்ளைகளே, இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய காரியமாவது, பதினேழு வயது முதல், அவன் எகிப்தில் அதிபதியான முப்பது வயது வரை (பதிமூன்று வருடங்கள்) நடந்த சம்பவங்களாகும். வாக்குக் கொடுத்தவர், சொன்னதைச் செய்யுமளவும் அவனைக் கைவிடாமல் நடத்திய அனுபவங்கள் தான். அவைகளைக் கவனியுங்கள்.

**1. ஆதி. 37:24 – குழியில் போட்டார்கள்.**

**2. ஆதி. 37:28 – அடிமையாக விற்றுப் போட்டார்கள்.**

**3. ஆதி. 39:20 – போத்திபார் சிறைச்சாலையில் போடுவித்தான்.**

**4. ஆதி. 40:23 – பானபாத்திரக்காரன் மறந்து விட்டான்.**

கர்த்தர் உங்களுக்கு சொன்னதைச் செய்யுமளவும் உங்களைக் கைவிடமாட்டார்.

## 2.மோசேயின் வாழ்க்கையில்

**கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார்...(யாத். 3:10)**

**கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினார்.(யாத். 12:51)**

யோசேப்பை அறியாத புதிய ராஜா ஒருவன் எகிப்திலே தோன்றினான். அவன் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து, அவர்கள் பெருகாதபடிக்கு ஒரு உபாயம் பண்ண வேண்டும் என்றான். அதினிமித்தம் அவர்களை ஒடுக்கும்படி சுமை சுமக்கிற

வேலையினால் கடினமாய் நடத்தினான். அவர்களை எவ்வளவாய் ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பெருகினார்கள்.

எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளோடே பேசி: நீங்கள் எபிரேய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, ஆண் பிள்ளையானால் கொன்று போடுங்கள், பெண்பிள்ளைகளானால் உயிரோடே இருக்கட்டும் என்றான். மருத்துவச்சிகளும் தேவனுக்குப் பயந்ததினால், ராஜா தங்களுக்கு கட்டளையிட்டபடி செய்யாமல் ஆண்பிள்ளைகளையும் காப்பாற்றினார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில், லேவியனின் மனைவியாகிய, ஒரு ஸ்திரீ ஒரு ஆண் பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்று மாதம் ஒளித்து வைத்தாள், அதை அப்புறம் ஒளித்துவைக்க கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் புசி, அதிலே பிள்ளை வளர்த்தி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள்.

நதியிலே ஸ்நானம் பண்ண வந்த பார்வோனின் குமாரத்தி பெட்டியைக் கண்டு, அதை எடுத்துவரச் சொன்னாள். பெட்டியைத் திறந்து பார்த்தபோது அது ஒரு எபிரேய பிள்ளை என்று கண்டாள். இந்த சங்கதிகளை தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பிள்ளையின் தமக்கை, பார்வோன் குமாரத்தியினிடத்தில் வந்து, இந்தப் பிள்ளையை உமக்கு வளர்க்கும்படி, எபிரேய ஸ்திரீகளில் பால் கொடுக்கிற ஸ்திரீயை அழைத்து வரட்டுமா என்றாள். அதற்கு அவள் அழைத்து வா என்றாள். தமக்கை போய் பிள்ளையின் தாயையே அழைத்துக் கொண்டு வந்தாள்.

பிள்ளை பெரிதான போது அவள் அதைப் பார்வோனின் குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விட்டாள். அவன் அவளுக்கே குமாரனானான். அவள் அவனுக்கு, ஜலத்தினின்று எடுத்தேன் என்று சொல்லி மோசே என்று பேரிட்டாள்.

மோசே பெரியவான காலத்தில், தன் சகோதரர்கள் சுமை சுமக்கிறதைப் பார்க்க வந்தான். தன் சகோதரனாகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு, எகிப்தியனை வெட்டி மணலிலே புதைத்துப் போட்டான். இந்த செய்தியானது பார்வோனுக்கு தெரிந்தபோது, அவன் மோசேயை கொலை செய்ய வகை தேடினான். பார்வோனின்று மோசே தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்குகிறான். அங்கு ரெகுவேலின் குமாரத்தியை விவாகம் பண்ணி வாழ்ந்தான்.

மோசே தன் மாமனின் ஆடுகளை மேய்த்து வந்தான். தேவ பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான். கர்த்தர் அவனுக்கு முட்செடியில் தரிசனமானார். நான் உன்னை பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார். அதற்கு மோசே நான் எம்மாத்திரம் என்றான். அதற்கு கர்த்தர் நான் உன்னோடே கூட இருப்பேன் என்றார். தமது வல்லமையை விளங்கப்பண்ணும்படி மூன்று அடையாளங்களைக் காண்பித்தார். ஒரு கோலையும் அவன் கையிலே கொடுத்து, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய் என்றார்.

மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே நான் வாக்குவல்லவனல்ல, நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன். நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான். அவன் சகோதரனாகிய ஆரோனை அவனுக்குத் துணையாக ஏற்படுத்தினார்.

மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்துக்குப்போய், கர்த்தர் வனாந்திரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களை போகவிட வேண்டும் என்று

சொல்லுகிறார் என்றார்கள். அதற்கு பார்வோன், "நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" என்றான். பார்வோன் இருதயம் கடினப்பட்டது. இதினிமித்தம் பத்து வாதைகள் அனுப்பப்பட்டது. பத்தாவது வாதை தலைப்பிள்ளை சங்காரம். மனிதர் மிருகஜீவன்களின் தலையீற்றையும் கர்த்தர் அழித்தார்.

இராத்திரியிலே பார்வோன் மோசேயையும், ஆரோனையும் அழைத்து! நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, என் ஜனங்களை விட்டுப் புறப்பட்டுபோய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள் என்றான். அன்றைய தினமே இஸ்ரவேலர் அணியணியாய் எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள். சொன்னைத் செய்கிறவர் தாம் சொன்னபடியே செய்து முடித்தார்.

**நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராபடிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப் பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் தேவனாகியக் கர்ததர்...(லேவி. 26:13)**

# 3. தாவீதின் வாழ்க்கையில்

**கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ உன் கொம்பை, தைலத்தால் நிரப்பிக் கொண்டு வா; பெத்லெகேமியானாகிய ஈசாயினிடத்துக்கு என்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்து கொண்டேன் என்றார். (1சாமு. 16:1)**

**தாவீது சமஸ்த இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான்.(1நாளா. 14:8)**

சாமுவேல் முதிர்வயதானபோது தன் குமாரரை இஸ்ரவேலின் மேல் நியாயாதிபதிகளாக வைத்தான். அவர்கள் சாமுவேலின் வழியில் நடவாமல் பொருளாசைக்கு சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள். அதினால் இஸ்ரவேலின் மூப்பர் சாமுவேலினிடத்தில் வந்து, உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை. ஆகையால் சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். சாமுவேலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே சவுலை ராஜாவாக ஏற்படுத்தினான்.

சவுல் ராஜாவாக்கப்பட்ட பின்பு, அவனது நடவடிக்கைககள் கர்த்தருக்கு ஏற்றதாக இல்லை. வார்த்தையை நிறைவேற்றவில்லை. தனக்கென்று ஒரு ஜெயஸ்தம்பத்தை நாட்டினான். கர்த்தரின் வார்த்தையைப் புறக்கணித்தான். இதனால் கர்த்தரும் சவுலை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார். சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். அதினால் தாவீதை ராஜாவாக ஆயத்தப்படுத்துகின்றார்.

தாவீது, பெலிஸ்த வீரன் கோலியாத்தை ஜெயித்த விஷயத்தில், ஸ்திரீகள் ஆடல் பாடலுடன் வந்தார்கள். அவர்கள் பாடும்போது, சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள். அந்த வார்த்தை சவுலுக்கு மிகவும் விசனமாயிருந்தது. அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதை காய்மகாரமாய்ப் பார்த்தான். தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்கு சத்துருவாயிருந்தான். சுமார் பன்னிரெண்டு முறை அவனை கொலை செய்ய வகைதேடினான். சவுல் அனுதினமும் தாவீதைத் தேடியும், தேவன் தாவீதை சவுல் கையில் ஒப்புக் கொடுக்கவில்லை.

கட்டிப்போடப்பட்ட மாடு: (யோவே. 2:26) ➠

சவுல் தன் மகனாகிய யோனத்தானிடத்தில் பேசும்போது, தாவீது உயிரோடிருக்கும் நாள் வரைக்கும் நீயானாலும் உன் ராஜ்ய பாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டு வா; அவன் சாக வேண்டும் என்றான்.

சவுலைக் கொலை செய்வதற்கு, தாவீதுக்கு இரண்டு வாய்ப்பு கிடைக்கிறது. தாவீதோடிருக்கிறவர்கள் சவுலைக் கொன்றுபோடுவோம் என்கிறார்கள். ஆனால் தாவீதோ, கர்த்தர் அபிஷேகம் பண்ணினவர் மீது கையை போட்டு குற்றமில்லாமற் போகிறவன் யார்? என்கிறான்.

சாமுவேல் சவுலைப் பார்த்து: நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர். நீர் இஸ்ரவேலின்மேல் இராஜாவாயிராதபடிக்கு கர்த்தர் உம்மைப் புறக்கணித்துத் தள்ளினார். உம்மைப் பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார் என்றான்.

தாவீதிக்கு வாக்குக் கொடுத்த தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுவதில் கவனமாக இருக்கிறார். தாவீது இரண்டுமுறை ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுவதைக் காண்கிறோம். அதன் பின்னரே தாவீது சமஸ்த இஸ்ரவேலின்மேல் ராஜாவாகினான். கர்த்தர் தாம் சொன்னதைச் செய்யும்வரை அவனைக் கைவிடவில்லை.

**1. 2சாமு. 2:4 – யூதாவின் மனுஷர் தாவீதிதை யூதாவின் வம்சத்தார்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.**

**2. 2சாமு. 5:3 – இஸ்ரவேலின் மூப்பர் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.**

## 4. பவுலின் வாழ்க்கையில்:

**பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ, உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான்... (அப். 27:24)**

**எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்...(அப். 27:24)**

காற்று அவர்களைத் தடுத்தபடியினால், அவர்கள் அநேக நாளாய் மெதுவாய் சென்றார்கள். அப்பொழுது பவுல் அவர்களை நோக்கி: மனுஷரே இந்தப் பிரயாணத்திலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தம் உண்டாகும்மென்று காண்கிறேன் என்று அவர்களை எச்சரித்தான்.

நூற்றுக்கு அதிபதியோ பவுலின் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.

தென்றல்காற்று மெதுவாயடித்தபடியால், தாங்கள் நினைத்தது கைகூடி வந்ததென்று எண்ணிப் புறப்பட்டார்கள். கொஞ்ச நேரத்துக்குள்ளே "யூரோக்கிலிதோன்" எனும் கடுங்காற்று கப்பலில் மோதிற்று. கப்பல் அதில் அகப்பட்டுக் கொண்டபடியினால், காற்றின் போக்கிலே கொண்டுபோகப்பட்டது. அநேக நாளாய் சூரியானாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருகாற்று மழையும் அடித்துக் கொண்டிருந்தபடியால் தப்பிப்பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று.

எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. (பிர. 11:1) ➠

இந்தச் சூழ்நிலையில் பவுல்அவர்களை நோக்கி: மனுஷரே, பயப்படாதிருங்கள். என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த ராத்திரியிலே என்னிடத்தில் வந்து பேசினான். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்றான்.

பதினாலாம் ராத்திரியானபோது, கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாக காணப்பட்டது. உடனே நங்கூரங்களைப் போட்டு, கப்பலை நிறுத்தி, பொழுது எப்பொழுது விடியுமோ என்றிருந்தார்கள். பொழுது விடிந்த பின்பு, ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது. கரைக்கு நேராகப் போய் சேர்ந்தார்கள். இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்.


அன்பு நேசப்பிள்ளைகளே! தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை அற்றுப் போன நிலையில், கர்த்தர் பவுலுடன் பேசினார். கப்பலில் வந்தவர்களுக்கு இதுதான் நமது கடைசி யாத்திரை என்றும் கடல்தான் நமக்கு கல்லறைத்தோட்டம் என்றும் நினைத்தார்கள். ஆனால் கர்த்தரோ அதை மாற்றி அமைத்தார். எல்லாரையும் கரையேறப்பண்ணினார்.

யோசேப்பு, மோசே, தாவீது, பவுலின் வாழ்க்கையிலும் தாம் அவர்களுக்கு சொன்னதைச் சொன்னபடி நிறைவேற்றினார். உங்கள் வாழ்க்கையிலும் உங்களுக்குச் சொன்னதை நிறைவேற்றுவார். அதுவரை பொறுமையாய், நிதானமாய் ஜெபத்துடன், ஸ்தோத்திரத்துடன் அமர்ந்திருந்து உங்களுக்காக ஆயத்தமாக்கின நன்மையை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். ஆமென்! அல்லேலூயா!!

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [ஜூலை 2026]



**1. மத்திய, மாநில அமைச்சர்கள், உயர் அதிகாரிகளுக்காக...**
**2. நாட்டின் முப்படை தளபதிகள், அதிகாரிகளுக்காக...**
**3. நாட்டின் எல்லைப் பாதுகாப்புப் படையினருக்காக...**
**4. ஒவ்வொரு மாநில முதல்வர்கள், கவர்னர்களுக்காக...**
**5. நாட்டின் பிரதமர், ஜனாதிபதிக்காக...**
**6. விவசாயிகளின் நலன், பாதுகாப்பு கவனிக்கப்பட...**
**7. விலைவாசி ஏற்றம், வரி ஏற்றம் சீர்ப்படுத்தப்பட...**
**8. மாநிலத்தின் உரிமைகள், தேவைகள் நிறைவேற்றப்பட...**
**9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியர்கள், ஊழியங்கள், விசுவாசிகளுக்காக...**
**10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக ஊழியங்களுக்காக...**



## நடப்புச் செய்திகள்



1. 500 மின்சார பஸ் கொள்முதல் டெண்டர் ரத்து.
2. 625 மின் பஸ்கள் தனியார் மூலம் இயக்க அரசு திட்டம்.
3. உலகக் கோப்பைத் தொடரில் வரலாற்று சாதனை.
4. பா.ம.க. அப்பா, மகன் உறவு தொடரும்.
5. மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களை தனியாரிடம் ஒப்படைக்க கூடாது.
6. இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற சீனா தயார்.

பிள்ளைக்கு ஆகாரம் உண்டு. (பிர. 3:11)

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. எதிரியை விட போலி நண்பனே ஆபத்தானவன்!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! நம்பிக்கை துரோகம் செய்கிறவர்கள் பெருகியிருக்கிறார்களே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! நீயோ! மனத்தெளிவுள்ளவனாயிரு, எதிரியைக் கூட ஒரு நிலையில் வைத்துக் கவனிக்கலாம். ஆனால் போலி நண்பரே மிகவும் ஆபத்தானவர்கள். அப்படிப்பட்டவர்களை விட்டுவிலகி இருப்பதே நல்லது" என்றார்.

**பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்...(1தெச. 5:22)**

## 2. அழகை ரசிக்கலாம், ருசிக்க நினைக்காதே!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! அழகை ருசிக்க பிரயாசப்பட்டதினால், வேதனை வந்துவிட்டதே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! அழகை ரசிக்கலாம், அது தவறல்ல, ஆனால் அதை ருசிக்க, அனுபவிக்க நினைக்கும்போது, அதைத் தொடர்ந்து பிரச்சனைகள் வரும் என்பதே உண்மை." என்றார்.

**உன் இருதயத்தில் அவள் அழகை இச்சியாதே... (நீதி.6:25)**

## 3. உடைந்து சிதறுவதைவிட, உழைத்து சிதறவது நல்லது

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! வேதனையினால், உள்ளம் உடைந்து சிதறுகிறதே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! உடைந்து சிதறுவதினால் என்ன பிரயோஜனம், அதைவிட, உழைத்து சிதறுவாயானால், ஒவ்வொரு சிறு துண்டுகளும் பெற்றுக்கொள்பவருக்கு பயனுள்ளதாக இருக்கும்" என்றார்.

**சிலர் கப்பல் துண்டுகள் மேலும் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்.. (அப். 27:44)**

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள். கடைசி இரண்டு கேள்விகளும் **ஏசாயா – எசேக்கியேல்** புஸ்தகங்களுக்கிடையே உள்ளது.

**ஜூலை 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் – எதை?
2. எனக்காக கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் – என்றது யார்?
3. எவைகள் அவர்களுக்கு கண்ணியாயிற்று?
4. நீங்கள் துரோகம் பண்ணினீர்கள் – என்றது யார்?
5. நீங்களோ மிகவும் எச்சரிக்கையாயிருங்கள் – என்றது யார்?
6. நீ செய்தது போல நான் உனக்கும் செய்வேன் – என்றது யார்?
7. அவரை மிகவும் கோபப்படுத்தினான் – யார்?
8. ஒன்றுக்கும் உதவாமற் போனீர்கள் – என்றது யார்?
9. நீ எதைக்கொண்டு போக வேண்டாம்?
10. யார் என்னை நம்புவார்களாக?
11. திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுப் போவீர்கள் – என்றது யார்?
12. அவர் சந்நிதியிருந்து புறப்பட்டு ஓடினது – எது?

## 2026 ஜூன் மாத மீன்கள்

1. ஏசா 21:14 – அப்பம்
2. 1சாமு. 10:7 – சாமுவேல்
3. மீகா 6:16 – நீந்தையை
4. சங். 119:109 – என் பிராணன்
5. யோபு 19:16 – யோபு
6. 1இரா. 13:7 – ராஜா
7. அப். 21:39 – கோட்டைக்குள்ளே
8. வெளி. 19:20 – அக்கினி கடலே
9. 2இரா. 6:19 – எசா
10. எசே. 16:63 – வாயை
11. ஏசா. 40:19 – கர்த்தர்

## 2026 மே மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
02. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
03. Mrs. ஷெர் சாம் – அரக்கோணம்.
04. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
05. Mrs. J. ஜான்சி – ஆனைமலை.
06. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
07. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
08. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
09. Mrs. ஜேன் தர்மராஜ் – பாக்கியநாதபுரம்.
10. Sist. அஸ் குணசீ – சாயர்புரம்.

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.07.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

**பதிவுத் தபால் அனுப்பிட செலவு தனி**

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சகேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj